# அரசியலும் புனிதமும்

முதலாம் உலகப் போர் (**The First World War**) முடிவு பெற்ற முதல் நூற்றாண்டு விழா இவ்வாண்டு நவம்பர் மாதம் 11-ஆம் திகதியன்று உலகெங்கும் கொண்டாடப்பட விருக்கின்றது. இந்த ஒரு நூற்றாண்டில் உலகம் எவ்வளவோ முன்னேறி விட்டது, பல நாடுகளுக்கிடையில் சண்டைகள் நின்று விட்டன, கீழ்த்திசை நாடுகள் பல இன்று முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைத்து விட்டன. போர் வீரர்கள் இல்லாமல் போடும் சண்டைகளால் பல உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப் படுகின்றன என்று பலரும் மகிழ்ச்சியடைகின்றனர். அதே சந்தர்ப்பத்தில் உலகில் பத்து வீதம் மக்கள் இன்னும் ஏழ்மையினால் அவதிப் படுகின்றனர். உயர்ந்து வரும் உஷ்ண நிலையால் உலகின் இயற்கை வளங்கள் ஆபத்துக்குள்ளாகி வருகின்றன. உள்நாட்டுக் குழப்பத்துக்கான அறிகுறிகள் உலகின் பல நாடுகளில் காணப் படுகின்றன. அகதிகளின் எண்ணிக்கை உலகெங்கும் அதிகரித்து வருகின்றது என்று உலகின் தலை சிறந்த விஞ்ஞானிகள் இருநூறு பேர் தாங்கள் விடுத்த அறிக்கை ஒன்றில் எச்சரித்திருக்கின்றனர். மேலை நாடுகளைப் பொறுத்த வரையில், மக்கள் மனத்தில் ஒரு பதற்ற நிலை உண்டாகி இருப்பதனையும், மேல் நாடுகளின் சனத்தொகை குறைந்து கொண்டே செல்வதையும், குறிப்பாக முன்னேறிய மேலை நாடுகளில் மக்கள் புதுப் புதுத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்து சமுதாயத்தில் மாற்றம் வருமா என்று எதிர்பார்ப்பதனையும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இச்சூழ்நிலையில், 2015-ஆம் ஆண்டு சித்திரை மாதம் முப்பதாம் நாள் பரிசுத்த தந்தை பாப்பரசர் பொது நிலையினருக்கு வெளியிட்ட ஒரு அழைப்பினை க்யூபெக் மாகாண ஆயர்கள் மீண்டும் வெளிக் கொணர்ந்து அதனைப் பற்றி சிந்திக்குமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பாப்பரசர் கூறியுள்ளது இது தான்: அக் காலத்தில் பெரிய நாடுகளின் தலைவர்களாகத் திகழ்ந்த பிரான்ஸ் நாட்டு மன்னர் லூயிஸ், அங்கேரி நாட்டு அரசி எலிசபெத், ஸ்வீடன் நாட்டுத் தலைவி கத்தரீனம்மாள் ஆகியோர் இன்று புனிதர்கள் வரிசையில் விண் மீன்களாகச் சுடர் வீசிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் தங்கள் வாழ்வினையே பிறர் தொண்டிற்காகவும் இறைத் தொண்டிற்காகவும் அர்ப்பணம் செய்து, தங்கள் அரசியல் பணிகளைச் சீருடனும் சிறப்புடனும் நிறைவேற்றி, புனிதர் நிலைக்கு உயர்ந்துள்ளனர். இருபத்தொன்றாம் நூற்றாண்டில் வாழுகின்ற கிறிஸ்தவர்களாகிய நாங்களும் இப்புனிதர்களைப் பின் பற்றலாம், அரசியலில் நுழையலாம், அரசியலின் மூலம் புனித நிலைக்கு உயரலாம், கிறிஸ்தவன் கையில் அரசியல் என்பது ஒரு அமைதிக் கருவி என்பதை உலகிற்கு நிருபித்துக் காட்டலாம் என்று பரிசுத்த தந்தை பிரான்ஸிஸ் கிறிஸ்தவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். கனடா நாட்டின் பல மாகாணங்களிலும், நகரங்களிலும் தேர்தல்கள், ஓட்டுக்கள் என்று எல்லோரும் ஆர்வத்துடன் தொலைக் காட்சிகளையும் விண்ணலைகளையும் கவனித்துக் கொண்டு வரும் சமயம் இந்நேரம். இந்நாட்டு சனத் தொகையில் ஒரு வீதத்தை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் நாங்களும் அரசியலில் ஈடுபட விழையும் எம் இளைஞர்களுக்கும், பெரியோர்களுக்கும் எவ்வாறு துணையாக நிற்கலாம் என்றும், எவ்வாறு அவர்களை ஊக்குவிக்கலாம் என்றும், எவ்வாறு அவர்களுக்கு உற்சாகத்தை அளிக்கலாம் என்றும், நினைத்துப் பார்ப்பது நலம். இறைவன் எமக்கு உதவி செய்வாராக. சகல புனிதர்களின் மாதமாகிய ஒளி ஏற்றும் இக் கார்த்திகை மாதத்தில் வானினின்று எம் மூதாதையர் இறைவன் சன்னதியில் எமக்காகப் பரிந்து பேசுவார்களாக. ஆமென்.